ளுடைய பெயர்களைப் பதிவு செய்துகொண்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அதை மாற்றி விதியைத் தளர்த்தி எஸ். எஸ். எல். சி. தேருதவர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கண்டக்டர் லைசென்ஸ் பெற்றவர்கள எஸ். எஸ். எல். சி. தேறியிருநதால் அவர்களுக்கு முன் சலுகை அளிக்கப்படுகிறது. அவர்களும் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களும் கண்டக்டர்களாக வருகிறோம் என்று சொல்கிற சூழ்நிலை இருக்கிறது. திறமையாக இருப்பார்களானால் எஸ். எஸ். எல். சி. குறைவாகப் படித்திருந்தாலும் அவர்களை எடுத்துக்கொள்வதிலே இப்பொழுது விதிகள் ஒன்றும் குறுக்கே இல்லை.

பழனியில் முருகன் கோயில் நிர்வாகத்தினரால் நடத்தப்படும் கல்லூரிகள்.

* 664 வினா.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி முருகன் கோயில் நிர்வாகத்தின் மூலமாக நடத்தப்படும் கல்லூரிக்காக 1970–71-ம் கல்வி ஆண்டில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நடத்தப்படும் நான்கு கல்லூரிகளுக்கும 1970–71-ம் கல்வி ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 9,17,753.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பழனி தேவஸ்தானத்தினால் நிர்வகிக்கப்படும் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு குறிப்பாக பழனி தேவஸ்தானம் நடத்துகின்ற காரணத்தினாலே காவடி ஆட்டம், கரக ஆட்டம் போன்றவற்றில் பயிற்சி கொடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ? காவடிச் சிந்து என்பது, திருப்புகழில் சேர்க்கப்பட்டு, சிறப்புப் பாடமாக வைக்க அரசு ஆவன செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பழனித் திருக்கோயில் நடத்திவருகின்ற காரணத்தினாலேயே காவடி ஆட்டம் கற்றுக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அங்கேயுள்ள செந்தமிழ்க் கல்லூரியின் மூலம் தமிழ்ப்பாடங்கள் எல்லாம் கற்றுக்கொடுக்கப் படுகின்றன.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பழனியிலே உள்ள கடவுள் முருகக் கடவுள், தமிழ்க் கடவுள், அப்பனுக்கே தமிழ் போதித்த கடவுள், அப்படியிருக்கும்போழுது ஸ்ரீதண்டாயுதபாணி என்று பெயர் போட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதே, அந்த ஸ்ரீ என்ற சொல் வடமொழிச் சொல்லாயிற்றே, எனவே அதை நீக்கிவிட்டுத் தமிழ்ப் பெயர் வைப்பதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துரை முருகன் என்று வைக்கலாமா அல்லது திருமுருகன் என்று வைக்கலாமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துரை முருகனை, திருமுருகன் என்று மாற்றிக்கொள்வதிலே ஆட்சேபணையில்லை.

திருமதி. த. ந. அனந்தநாயகி : பழனிக் கோயிலிலே ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று சொல்லமுடியுமா ? அதிலே எந்த அளவுக்கு அந்தக் கல்லூரிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றிக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

K. M. SUBRAMANIAM : Sir, is it not fact that.

'Muruga' has two wives one from Draveha Nadu and one from Arya Nadu and may I know whether He is surely a Tamil-God —Arya God ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மேடையிலே பிரிவினைப்பற்றி அடிக்கடி பேசவருகிறார்கள், கடவுளிடத்திலே பிரிவினை வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கோயில்களிலே பழனியிலே உண்டியல் மூலமாக—மற்ற முறைகளிலே வருகின்ற வருமானங்கள் பற்றிய விவரங்கள் இல்லையென்றாலும், உண்டியல் மூலமாக வருகிற வருமானத்தையாவது தெரிவிக்கமுடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தனியாகக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.